1099

1099
3159

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

விகாரி
ஆவணி - புரட்டாசி

SEPTEMER
1959

தொகுதி 21
பகுதி 9

Vol. 21
No. 9

ஆசிரியர் :
பண்டித ஸ்ரீ. மெ. ஸௌந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்.
உப ஆசிரியர் & பிரசுரகர்த்தா:
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.

பொருளடக்கம்

சென்னை மந்திரியிடம் மஹஜர்	3
பாலசிகித்ஸா	4—6
...ய்திகள்	7
...ன்னை சுகாதார மந்திரியிடம் ஸமர்ப்பித்த மஹஜர்	1—5
...ரீரச் சொற்கள் அகராதி (தனி)	37—40

*
Annual
Subscription
Rs. 5/-
*

JL
L3mm21,N39
N59.21.9
188879

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

நீலீபிருங்காதி தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கும் எல்லா கால நிலைகளிலும் ஆரோக்கியமான கூந்தல் வளத்திற்கும் மெருகுக்கும் அனைவராலும் பாராட்டப் பட்டது.

தயாரிப்பாளர்கள் :

ஆர்ய வைத்தியசாலா

(ஸ்தாபிதம் : 1902)

கோட்டக்கல். (கோழிக்கோடு ஜில்லா)

கிளைகள் : கோழிக்கோடு (போன் 155) திரூர் (போன் 31), பாலக்காடு (போன் 104), ஈரோடு, மற்றும் எர்ணுகுளம். விற்பனை டிப்போ : பாலக்காடு (வெட்டிகுளம் ரோட்).

600-க்கு மேற்பட்ட தரமான ஆயுர்வேத மருந்துகள் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகின்றன. எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் சிறந்த ஆயுர்வேத சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. நவரக்கிழி, தாரா, பிழிச்சல் முதலான விசேஷ கேரள முறைகளும் கோட்டக்கல்லில் எங்கள் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங் ஹோமில்** மிதமான கட்டணங்களில் அளிக்கப்படுகின்றன. நேரில் ஆலோசித்தோ அல்லது தபால் மூலமோ, எமது பிரதான வைத்தியர் சிகித்சையும், மருந்தும் அளிப்பார்.

மேல் விவரங்களுக்கு தயவு செய்து

மானேஜிங் டிரஸ்டிக்கு எழுதவும்.

A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

Have your requirments from :—

KALIA BROTHERS (Regd.)

5C/9, ROHTAK ROAD, NEW DELHI—5.

OR

KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA.

*

ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானால்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டா.

உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

5 C/9, ரோஹ்தாக் ரோடு, புது டில்லி—5.

அல்லது

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலா:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன,

வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

எமது விசேஷ மருந்துகள்

4. சந்திரிகாவலேஹம்.

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, *மானேஜிங் டைரெக்டர்*

சென்னை-600 008.
18884

ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 21	விகாரி – ஆவணி – புரட்டாசி	பகுதி 9
Vol. 21	SEPTEMBER 1959	No. 9

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ।

சென்னை மந்திரியிடம் மஹஜர்.

சென்னை சுகாதார மந்திரியிடம் சென்ற நவம்பரில் ஸமர்ப்பித்த மஹஜரை ஞாபகப் படுத்தி இந்திய வைத்தியத் துறையில் அரசாங்கம் கையாள வேண்டிய வழிகளைப் பற்றி விவரமாகத் தெரிவிக்கும் மஹஜர் ஒன்றை சென்னை சுகாதார மந்திரியிடம் ஸமர்ப்பிக்கவும், சென்னையில் தற்சமயம் கூடியுள்ள M. L. A. M. L. C. முதலிய மக்கள் பிரதிநிதிகளை நேரில் கண்டு, நாட்டு வைத்ய முறைகள் பற்றிய இன்றைய நிலையை அவர்களுக்கு விவரித்துக் கூறி, மக்களின் நலனைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் அதன் கடமையை அடிக்கடி ஞாபகப் படுத்திச் செயலாற்றத் தூண்டுமாறு கோரவும் மஹாமண்டலப் பிரதிநிதிகள் அடங்கிய கோஷ்டி 6—9—59 அன்று சென்னை செல்கிறது. சென்ற 12—8—59 அன்று நடந்த மஹாமண்டல நிர்வாஹ ஸமிதிக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானப்படி இந்த கோஷ்டி கனம் மந்திரியாரையும் மக்கள் பிரதிநிதிகளையும் நேரில் கண்டு நாட்டு வைத்ய விஷயமாக அரசாங்கம் கையாள வேண்டிய கொள்கைகளை விவரமாக எடுத்துக் கூறுவதைக் கவனத்துடன் கேட்டுச் செயலாற்றுவர்களென நம்புகிறோம்.

பாலசிகித்ஸா

ரக்தாநவஸ்தா சிகித்ஸை.

(தொடர்ச்சி.)

ஸைகதத்தின் அறிகுறியும்—சிகித்ஸையும்.

மணல் அளவில் தாம்ர நிறத்தில் நன்கு புலப்படும் மண்டலமான வீக்கம் ஏற்பட்டு மூத்திரம் மலம் கண்கள் நகங்கள் மஞ்சளாகியும் எரிச்சல் ஜ்வரம் நாவரட்சி மயக்கம் இவைகளுடனும் காணும்.

இதற்கு சிற்றாமுட்டிவேர், நன்னாரி, தண்ணீர்விட்டான் கிழங்கு, கோரைககிழங்கு, நெரிஞ்சில், மூக்கரட்டைவேர், தாமரைக் கேஸரம், சீந்திற்கொடி, காஞ்சூரிவேர், கடுகுரோகிணி, நெல்லிமுள்ளி இவைகளின் கஷாயத்தில் நெய் சேர்த்தோ சர்க்கரை சேர்த்தோ இரண்டும் சேர்த்தோ சாப்பிட நல்லது.

தாமரை வளையம், தார்தாவல்வேர், காஞ்சூரிவேர், மரமஞ்சள் தோல், மூக்கரட்டைவேர், தேவதாரு, கடம்பின் பட்டை, அத்திப் பட்டை, வேப்பம்பட்டை, சீந்திற்கொடி, ஆடாதோடைவேர், கொத்துமல்லிவிதை, சிற்றரத்தை, நீர்முள்ளி விதை, மஞ்சள், வெட்டிவேர், விலாமிச்சைவேர், சந்தனத்தூள், அருகம்புல், கடுக்காய்தோல், இவைகளின் கஷாயம் நெய் சேர்த்துச் சாப்பிட நல்லது.

மற்றும் வாதபித்த விஸர்ப்பத்தில் கூறப்பெற்றுள்ள ஸ்நேஹங்கள், ஸ்னுனஜலம் இவை, இதிலும் பின்கூறப்படும் தர்துரத்திலும் கோடகத்திலும் ஏற்கக்கூடியவை.

தர்துரத்தின் அறிகுறியும்— சிகித்ஸையும்,

சுற்றளவு (மண்டலம்) நன்கு புலப்படாமல் ஸைகதத்திற்குக் கூறப்பெற்றுள்ள லக்ஷணங்களுடனும், வாய்கசப்பு, கண்ணீர்மல்குதல், அரோசகம் இவைகளுடனும் காணப்படும். அடிக்கடி தர்துரம் (தவளை) போல் வியர்த்துக் கெட்ட நீரை வெளியாக்கும். வீக்கம் கனத்து இருக்கும்.

மரமஞ்சள், காஞ்சூரிவேர், விலாமிச்சைவேர், சீந்திற்கொடி, கொத்துமல்லிவிதை, கோரைக்கிழங்கு, திராக்ஷை, மூக்கரட்டைவேர், தேவதாரு, கடுக்காய் இவைகளின் கஷாயம் நெய்யும் சர்க்கரையும் அல்லது சாக்கரை தேன் ஜீரகத்தூள் நெல்லிக்காய், சாறு சேர்த்துச் சாப்பிடலாம்.

தாமரைக் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, லோத்திரப் பட்டை, மரமஞ்சள், மூக்கரட்டைவேர், கோரைக்கிழங்கு, பரச் சுண்டைவேர், ஏகநாயகம்வேர், வட்டத்திருப்பி, சந்தனத் தூள் இவைகளின் கஷாயத்தில் தேனும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிட நல்லது.

கோடகத்தின் அறிகுறியும்—சிகித்ஸையும்.

தர்துரத்தின் குறிகள் யாவும் இங்கு காணும். ஆனால் அதிகப்படியாக பச்சைநிறமுள்ள சிரைகள் ஒடுவது இதில் அதிகமாகும்

தேக்கின்பட்டை, சீந்திற்கொடி, நெல்லிமுள்ளி, நீர்முள்ளி, மூக்கரட்டை, ஆடாதோடை, நன்னாரி, விலாமிச்சைவேர், பேய்த்தும்மட்டிவேர் இவைகளின் கஷாயத்துடன் சர்க்கரை தேன் சேர்த்துச் சாப்பிட ஸைகதம் கோடகம் தர்துரம் மூன்றும் சமனமடையும். புளிவஞ்சிக்கிழங்கு, வரள்மஞ்சள், தேவதாரு, மூக்கரட்டைவேர், ஆடாதோடைவேர், நீர்முள்ளி, அரத்தை, பேய்ப்புடல், நால்பால் மரப்பட்டை, விருச்சிவேர் மேல் தோல் இவைகளின் கஷாயம் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க நல்லது.

கண்டகத்தின் அறிகுறியும், சிகித்ஸையும்.

அரிப்புடன் கடினமான முளைகளுடன் கடினமாகவும் அசையாமலுமிருக்கும். வாந்தி, அருசி, உமட்டல், தலைவலி, தோல் உணர்ச்சிக் குறைவு, ஜ்வரம், அசதி, தூக்கம், உடல் கனத்திருத்தல் இவைகள் காணும்.

சிற்றாமுட்டிவேர், ஏழிலைப்பாலைப்பட்டை, தண்ணீர்விட்டான் கிழங்கு, அரத்தை, கொன்னைதளிர், ஏலரிசி, சதகுப்பை, மூக்கரட்டை வேர், பெரிய நாயுருவி வேர், பேய்ப்புடல், திப்பிலி, ஆனைத்திப்பிலி இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது.

நிலவேம்பு, மாவிலங்கைப்பட்டை, காஞ்சூரிவேர், அரத்தை, திப்பிலி, இரிமுள்வைரம், மூக்கரட்டைவேர், ஏழிலம்பாலைப் பட்டை, நீர்முள்ளி, தேவதாரு, நன்னாரிவேர், ஆடாதோடைவேர், கருநொச்சிவேர், ஏகநாயகத்தின் வேர், கடுகு ரோகிணி, வரள் மஞ்சள், மரமஞ்சள்தோல் பேய்புடல் இவைகளின் கஷாயம் பரங்கிப்பட்டை சூர்ணம் மேம்பொடி சேர்த்து அல்லது அத்துடன் தேனும் சேர்த்து சாப்பிடலாம்.

வாத கபவிஸர்பத்தில் கூறப்பட்டுள்ள ஸ்நேஹங்களும் ஸ்னான ஜலங்களும் இதிலும் சிருங்ககத்திலும் மல்லகத்திலும் ஏற்கத்தக்கவை.

சிருங்ககத்தின் அறிகுறிகளும் சிகித்ஸையும்

கம்பிப்பாலைக்காயைப்போன்ற உருவத்துடன் கடினமான கொப்புளங்களுடனும் மற்ற கண்டகலக்ஷணங்களுடனும் கூடியிருக்கும்.

செம்பருத்திவேர், விலாமிச்சைவேர், கருநொச்சிவேர், பேய்புடல், கஞ்ஜிக்கொட்டத்தின் வேர், கோரைக்கிழங்கு, சிற்றுமுட்டிவேர், வெண் குறுந்தோட்டிவேர், ஊரகத்தின்வேர், மூக்கரட்டைவேர், பேய்த்தும்மட்டிவேர், நன்னாரி, மாகாளிக்கிழங்கு, சீந்திற்கொடி, தேவதாரு, மருதோன்றிவேர், கொன்னைவேர்பட்டை, வேப்பம்பட்டை, நிலவேம்பு இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது.

காட்டுமுல்லைவேர், பேய்தும்மட்டிவேர், நிலவேம்பு, வேப்பம்பட்டை, சீந்திற்கொடி, மருதம்பட்டை, இரிமுள்வைரம், மூக்கரட்டைவேர், கடுக்காய், நெல்லிமுள்ளி, கோரைக்கிழங்கு, மரமஞ்சள் தோல், பேய்புடல் அதிமதுரம் வில்வவேர், தேவதாரு, பெருங்குரும்பைவேர், சதகுப்பை இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது.

மல்லகத்தின் அறிகுறிகளும் சிகித்ஸையும்.

ரஸோத்கிலிஷ்டத்தைப்போன்ற குறிகளுடன் உடல் முழுவதும் அழுத்தினால் அமுங்காததாயும் காணப்படும்.

நீர்முள்ளிவேர், தேவதாரு, கடுக்காய், மூக்கரட்டைவேர் கொன்னைவேர்பட்டை, கடுகுரோகிணி இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

அருகம்புல், காஞ்சூரிவேர் கோரைக்கிழங்கு கண்டங்கத்திரிவேர் முள்ளுக்கத்திரிவேர் நெரிஞ்சில் வட்டத்திருப்பி புங்கன்பட்டை நிலவேம்பு வேப்பம்பட்டை, காட்டுமுல்லைவேர் மூக்கரட்டை வேர், எருக்கின் வேர்பட்டை எருக்கம் பழுப்பு கருநொச்சிவேர் அதிமதுரம் இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

மத்ய ஆயுர்வேத ஆலோசனையாளர்.

மத்ய சர்க்காருக்கு ஆயுர்வேத விஷயமாக ஆலோசனை கூற ஆயுர்வேத ஆலோசனையாளர் என்ற ஒரு ஸ்தானம் தாற்காலிகமாக இருந்ததை நிரந்தரமாக்கி, தற்சமயம் அந்த பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள கவிராஜ் ஸ்ரீ பிரதாபஸிம்ஹ அவர்களுக்குப் பதிலாக ஸ்ரீ தர்மாநந்த கேஸர் பானி அவர்கள் நியமனம் பெற்றுள்ளார் என்ற செய்தியைச் சென்ற சந்திரிகை இதழில் வெளியிட்டிருந்தோம், ஆனால் கேஸர் பானி அவர்கள் தாம் ஜாம் நகர் ஆயுர்வேத கலாசாலை ஸ்தாபனத்தின் பிரின்ஸ்பால் பதவியிலிருந்து விலகி இந்த பதவியை ஏற்க ஸம்மதிக்கவில்லை என்று அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாகத் தெரிகிறது. இந்த ஸ்தானம் பூர்த்தி யடையாமலே தானிருக்கிறது.

ஆயுர்வேத வைத்யர்களிடமிருந்து ஒருமுகப் பட்ட திட்டங்கள் வெளியாகாத நிலையில் அரசாங்கமும் திடமாக ஆயுர்வேத விஷயமாக முற்படாதிருக்கையில் ஆயுர்வேத ஆலோசகர் என்ற பெயரளவில் மதிப்புள்ள இந்த ஸ்தானத்தில் இருப்பதால், செயலளவில் ஒன்றும் திட்டமாகச் செய்ய முடியாதிருப்பது தான் அவர் இந்தப் பதவியை ஏற்காமலிருக்கக் காரணம் எனக் கூறப்படுகிறது.

C. M. சிவஸுப்ரமண்ய அய்யர்

காலமானார்.

சென்னை வெங்கட்ரமண ஆயுர்வேத கலாசாலையின் வைத்யராகவும் அத்யாபகராகவு மிருந்த ஸ்ரீ C. M. சிவஸுப்ரமண்ய அய்யர், A. L. I. M. அவர்கள் சமீபத்தில் சென்னையில் காலமானார் என்ற செய்தியைக் கேட்டு வைத்ய உலகம் மிகவும் துக்க மடைந்துள்ளது. வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலையில் படித்து ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத பட்டங்கள் பெற்ற பின் A. L. I. M. பரீக்ஷையிலும் தேறி மலையாளம் சென்று ஷோரனூர் கேரள ஆயுர்வேத ஸமாஜத்தில் கேரள விசேஷ சிகித்ஸைகளில் தேறி சென்னையில் உள்ள கேரள ஆயுர்வேத ஸமாஜத்தின் வைத்யராகச் சிலகால மிருந்த பின் வெங்கடரமண வைத்யசாலையின் கோமளீச்வரன் பேட்டை திருவல்லிக்கேணி ஜியார்ஜ்டவுன் கிளைகளில் வைத்யராக

இருந்த பின்னர், தலைமை வைத்யசாலையிலேயே வெகு நாட்களாக வைத்யராக இருந்து வந்தார். இவர் மஹாமண்டலத்தின் முன்னாள் நிர்வாஹ ஸமிதி அங்கத்தினராவர். சென்னையில் நடந்த தமிழ்நாடு ஆயுர்வேத மகாநாட்டில் பெரும் பொறுப்பை வஹித்து மகாநாட்டைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தார். அவரது பிரிவு வைத்ய உலகத்திற்குப் பெருத்த நஷ்ட முண்டாக்க வல்லது. அவரது ஆத்மா சாந்தி அடைய தன்வந்தரி பகவானைப் பிரார்த்திக்கிறோம்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

அவசர நிர்வாஹ ஸமிதிக் கூட்டம்

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் அவசர நிர்வாஹ ஸமிதிக் கூட்டம் 12—8—59 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. மண்டலத் தலைவர் பிஷக்வர ஸ்ரீ A. ராகவராவ் அவர்கள் தலைமை வஹித்தார்கள்.

கீழ்க் கண்ட அங்கத்தினர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி, திருச்சி; ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி; ஸ்ரீ T. S. ஈஸ்வரன், திருச்சி; ஸ்ரீ S. M. ஸுந்தரராஜாசார்யார், ஸ்ரீரங்கம்; ஸ்ரீ N. C. S. ராகவன், ஸ்ரீரங்கம்; ஸ்ரீ D. ஸ்ரீநிவாஸன், ராமேசுவரம்; ஸ்ரீ R. V. ராம சாஸ்திரி, கரூர்; ஸ்ரீ P. விசுவநாதன், புதுக்கோட்டை; ஸ்ரீ R. K. பழனியப்பா, சேலம்; ஸ்ரீ M. ராஜாபிள்ளை, சேலம்; ஸ்ரீ T. K. V. ஸுப்பிரமணியம், சேலம்;

கொடுமுடி ஸ்ரீ T. V. மாணிக்கம் அவர்களிடமிருந்து சம்மதிக் கடிதம் வந்தது.

ஸ்ரீ தன்வந்திரி பிரார்த்தனையுடன் கூட்டம் ஆரம்பமாகியது. பிறகு சென்ற 19—11—58ல் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் சபையில் வாசிக்கப்பட்டன. அத் தீர்மானங்களின் பேரில் மேற்கொண்டு செயலாற்றும் வழிகள் ஆராயப் பட்டன.

அடியிற் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன :—

1. சென்னை அரசாங்க சுகாதார மந்திரி கனம் ஸ்ரீ M. A. மாணிக்கவேலு அவர்களை உடனடியாக சென்னையில் பேட்டி கண்டு, அவரிடம் ஒரு சிறிய மகஜர் சமர்ப்பிப்பதென்றும், அவ்

விதம் பேட்டி காணுவதற்கு கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமிப்பதென்றும், மேலும் சென்னையிலிருந்தும் மேற்கொண்டு தேவையான அங்கத்தினர்களை குழுவில் சேர்த்துக் கொள்ளுவதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குழு அங்கத்தினர்கள் வருமாறு :—

1. வைத்ய ஸ்ரீ A. ராகவராவ், மண்டலத் தலைவர்.
2. ,, ,, T. S. ஈஸ்வரன், பொதுக் கார்யதரிசி.
3. ,, ,, V. B. நடராஜ சாஸ்திரி, திருச்சி.
4. ,, ,, V. ஸுப்பிரமணிய அய்யர், ஸ்ரீரங்கம்.
5. ,, ,, P. S. ராமசர்மா, கரூர்.
6. ,, ,, S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.
7. ,, ,, P, விசுவநாதன், புதுக்கோட்டை.
8. ,, ,, S. M. ஸுந்தரராஜாசார்யர், ஸ்ரீரங்கம்.
9. ,, ,, R. K. பழனியப்பா, சேலம்.
10. ,, ,, M, ராஜாபிள்ளை சேலம்.
11, ,, ,, T. K. V. ஸுப்பிரமணியம். சேலம்.

மேலே குறிப்பிட்ட காரியங்கள் யாவையும் உடனடியாகக் கவனித்து மேற்கொண்டு ஏற்பாடுகள் செய்யவும். இதற்கு வேண்டிய தொகையை நன்கொடை மூலம் பொது அங்கத்தினர்களிடமிருந்து வஸூல் செய்யவும், மண்டலத் தலைவருக்கும், பொதுக் கார்யதரிசிக்கும் பூர்ண அதிகாரம் அளிக்கப்பட்டது.

2. பரம்பரை வைத்தியர்களின் பதிவு விஷயமாக வந்துள்ள நியமங்களைப் பார்க்கும் போது, தற்போது பரம்பரை வைத்தியர்களாகத் தொழில் புரிந்து வருபவர்கள பதிவுக் கவசியமான தொழிற் காலமான 10 வருஷங்களுக்கு முன்னதாகவே 4 வருஷங்கள் B class பட்டம் பெற்ற வைத்யரிடமோ, A class வைத்தியரிடமோ பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்பதை யொட்டி, அக்காலத்தில் பரம்பரையாக வைத்தியப் பயிற்சி பெற்றவர்கள் Institutionally Qualified அல்லாத B class வைத்தியரிடமோ பயிற்சி பெற்றிருப்பதால், அவர்களுக்கு வாய்ப்பே கிடைக்காமல் போவதைத் தவிர்க்க. அந்த நியமங்களுக்கு ஒரு திருத்தம் கொணர்ந்து. A class B—class பதிவு பெற்றவர்களிடம் போல், நல்ல B–2 class பதிவு பெற்ற வைத்தியர்கள் எவரிடமாவது 4 வருஷங்கள் பயிற்சி பெற்று வந்தவர்களுக்கும் பதிவுக்கான வாய்ப்பளிக்க வேண்டுமென்று. மாற்றியமைக்க வேண்டுமெனச் கோரப்படுகிறது. தவிர, ரிஜிஸ்டிரேஷனுக்காக உள்ள விண்ணப்பத்தை ஒரு மாத தவணைக்குள் பூர்த்தி செய்து அனுப்புமாறு

உள்ள சர்க்கார் நிபந்தனைப்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் பயிற்சி அளித்தவர்களிடமும் கையெழுத்து முதலியவைகள் வாங்க அவகாசம் போராத காரணத்தை முன்னிட்டு, அவைகளைப் பூர்த்தி செய்து அனுப்ப, குறைந்தது 4 மாதங்கள் அவகாசம் கொடுக்க வேண்டுமென இக்கூட்டம் கோருகிறது.

3. மேற்கொண்டு வேறு அவசர விஷயம் ஒன்றும் கொண்டு வரப்படவில்லை.

மண்டல பொதுக் காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவடைந்தது.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

சேலம் ஜில்லா கிளை-சேலம்.

19—8—59 அன்று மாலை 2-மணிக்கு தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம் சேலம் ஜில்லா கிளையின் விசேஷ அவசரக் கூட்டம் சேலம் வ. உ. சி மார்கெட்டுக்கு எதிர்பக்கமுள்ள திரு. M. ராஜாபிள்ளை அவர்களின் குடோன் கட்டிடத்தில் சங்கத் தலைவர் ஸ்ரீ A. கோவிந்தநாயர் அவர்கள் தலைமையில் கூடியது. பின்னர் தலைவர் ஸ்ரீ A. கோவிந்தநாயர் அவர்கள் முன்னுரையாக இன்று கூட்டம் கூடிய நோக்கங்களை எடுத்துக் கூறி இதற்காவன உடனடியாக செய்யும்படி கேட்டுக் கொண்டார். பிறகு காரியதரிசி ஸ்ரீ R. K. பழனியப்பா தற்போது சென்னை இந்திய வைத்திய மத்தியக் கழகத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு ரிஜிஸ்டரான A. வகுப்பு வைத்தியர்களிடமோ B. I. வகுப்பு (Institutionally trained) வைத்தியர்களிடமோ 4 வருஷம் பயிற்சி பெற்ற சர்டிபிகேட்டும், அதற்கு பின்பு தாசில்தார் அந்தஸ்துக்கு குறைவிலாத ரெவினியூ இலாகாவில் உள்ள அதிகாரியிடம் 10 வருஷம் அனுபவம் உள்ளவரென சர்டிபிகேட்டும் வாங்கியனுப்பும்படியுள்ளது. மேலே குறிப்பிட்ட சட்டத்தில் கண்டுள்ளதுக்கு புறம்பான தாயுள்ளதுமன்றி, இத்தகைய நிபந்தனையில் எந்த வைத்தியர்களும் ரிஜிஸ்டர் செய்துகொள்ள முடியாத நிலையிலிருக்கிறபடியால் இதை மாற்றி அமைத்து குரு மூலம் பயிற்சி பெற்றவர்களும் எளிதில் பெறுமாறு இப்போதுள்ளதை மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், இதற்காக திருச்சி தலைமைச் சங்கத்திற்குச் சென்று அங்கு நிறைவேற்றிய தீர்மானங்களையும் எடுத்துக் கூறினார். பலருடைய கருத்தைக் கொண்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுமன்றி. மந்திரியைப் பேட்டிகாண ஆகும் சிலவிற்காக அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பத்து ரூபாய் வீதம் கொடுக்க வேண்டுமென்றும் கோரப்பட்டது.

தீர்மானங்கள்.

உடனடியாக மந்திரியை பேட்டி காண—1. வைத்யஸ்ரீ A. கோவிந்த நாயர் (தலைவர்). 2. வைத்யஸ்ரீ R. K. பழனியப்பா (காரியதரிசி), 3. வைத்யஸ்ரீ T. K. V. சுப்ரமணயம் 4. வைத்ய ஸ்ரீ S. வெங்கட்டராவ் 5. வைத்யஸ்ரீ S. V. கவுண்டர், 6. வைத்ய ஸ்ரீ M. ராஜா பிள்ளை ஆகிய அறுவர் கொண்ட தூதுகோஷ்டி அமைக்கப்பட்டு அவசியமானால் மேற்கொண்டு இரண்டொருவரை சேர்த்துக் கொள்ள தலைவர் காரியதரிசிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது-

வைத்தியர்களின் ரிஜிஸ்டிரேஷன் விஷயமாக வந்துள்ள நிபந்தனைகளைப் பார்க்கும் போது தற்போது பரம்பரை வைத்தியத் தொழில் புரிபவர்கள் பதிவு செய்து கொள்வதற்கு அவசியமான தொழிங் காலமான 10 வருஷங்களுக்கு முன்பு 4 வருஷங்கள் அங்கீகரிக்கபபட்டு ரிஜிஸ்தரான A வகுப்பு வைத்யரிடமோ, அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு வைத்தியப் பள்ளியில் பயிற்சி பெற்று ரிஜஸ்டரான B-I வகுப்பு வைத்தியரிடமோ பயிற்சி பெற்றிருக்க வேண்டு மென்பதானது அக்காலத்கில் பரமபரையாக வைத்தியப் பயிற்திப் பெற்றுள்ளவர்கள் Institutionally trained அல்லாத குரு முறையாக பயிற்சி பெற்றிருப்பதால் அவர்கள் இந்த நிபந்தணைப்படி பதிவு செய்து கொள்ள முடியாதாகையால் மேலே குறிப்பிட்ட A வகுப்பு, B I வகுப்பு என்பதுடன் ஏற்கனவே சென்டிரல் போர்டில் ரிஜிஸ்டரான B கிளாஸ் வைத்தியர்களிடம் 4 வருஷம் பயிற்சி பெற்றவர்களையும் பதிவு செய்து கொள்ளவேணடு மென்றும் பயிற்சிக்கு பின்பு வைத்தியர்கள் 10 வருஷத்துக்கு குறைவிலாத அனுபவமுள்ளவர்களென்பதை ரெவினியூ இலாகாவில் தாசில்தார் அந்தஸ்துக்கு குறைவில்லாத அதிகாரிகள் அந்த ஆபீஸின் ரிகார்டு பூர்வமாக என்பதை நீக்கி கிராம முன்சீப் அத்தாட்சி இருந்தாலேயே டை அதிகாரி சர்டிபிகேட் கொடுக்கலாமென (Certificate of Practice) உத்திரவிடும்படியாகவும், மேலும் பதிவுக்கான விண்ணப்பபாரங்கள் கிடைத்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் வாங்கியனுப்ப காலம் போதாதாகையால் அவைகளைப் பூர்த்தி செய்தனுப்ப குறைந்தது 4 மாத காலமாவது அவகாசம் அளிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

சேலம் நகரில் பிரபல வைத்தியர் ஸ்ரீமான் திம்மராய முதலியார் அவர்களும், ஆத்தூர் வைத்தியர் ஸ்ரீ S. V. குப்புசாமி அவர்களும் காலமானமைக்கு இக்கூட்டம் வருந்துவதுடன் அனுதாபம் தெரிவித்தது.

காரியதரிசி வைத்யஸ்ரீ R K. பழனியப்பா வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

188379
சென்னை-600 00

முக்யமான சில புள்ளி விவரங்கள்.

இந் நாட்டில் வருஷந்தோறும் ஆறுகோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுர்வேத மருந்துகள் செலவாவதாக மதிப்பிடப் படுகிறது.

இந்நாட்டில் சுமார் 100 ஆயுர்வேத மருத்துவ சாலைகளும். 5372 ஆயுர்வேத மருந்து சாலைகளும் உள்ளன.

இந்நாட்டில் பெயர் பதிவு செய்யப்பட்ட 1,15000 ஆயுர்வேத வைத்தியர்களும் பதிவு செய்யப்படாத 30 000 வைத்யர்களும் தொழில் நடத்தி வருகின்றனர். இவர்களில் 22 சதவிகிதம் அதாவது 25000 வைத்தியர்கள் வைத்ய ஸ்தாபனங்களில் பயிற்சி பெற்றவர்களாகும். மற்றவர்கள் பரம்பரை முறையில் பயிற்சி பெற்ற நாட்டு வைத்யர்களாவர்.

ஸர்க்கார் துறை, தனியார் துறை— இரண்டிலும். தற்காலம் 76 ஆயுர்வேதப் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவற்றில் 49 பயிற்சி நிலையங்கள் நவீன வைத்ய முறையும் சேர்த்துக் கற்றுத் தருகிற இணைந்த முறைப் பயிற்சி அமைப்பையும் 27 நிலையங்கள் சுத்த ஆயுர்வேத மருத்துவ முறை அடங்கிய பயிற்சி யமைப்பை யும் கொண்டனவாக உள்ளன. இவை தவிர ஆறு ஸம்ஸ்க்ருத மொழிப் பயிற்சிக் கல்லூரிகளும் ஆயுர்வேத முறையில் பயிற்சி அளித்து வருகின்றன.

இணைந்த முறைப் பயிற்சிக் கல்லூரிகளில் மொத்தம் 7000 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். வருஷந்தோறும் 1100 பட்டதாரிகள் வெளி வருகின்றனர். சுத்த ஆயுர்வேத பயிற்சி நிலையங்களில் 1500 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இவற்றிலிருந்து பிரதி வருஷம் 300 பட்டதாரிகள் வெளி வருகின் றனர்.

பல்வேறு மாகாணங்களில் 28 இடங்களில் சர்க்கார் நிதி உதவியுடன் ஆயுர்வேத முறையில் ஆராய்ச்சி நடைபெறுகிறது. மத்திய ஸர்க்கார் 1953-ம் ஆண்டில் ஜாம் நகரில் ஆரம்பித்து வைத்த மத்தியப் பயிற்சி நிலையத்தில் உள்நாட்டு வைத்ய முறை களில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆயுர்வேத வைத்யர்கள் இதுவரை அநேகமாக மருந்து களைத் தாங்களே தயாரித்து வந்தனர். மேல் நாட்டு மருத்துவ முறைகளும் நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்ததை யடுத்து ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கும் ஸ்தாபனங்களும தோன்றலாயின.

தற்காலம் ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கும் தொழிற் சாலைகளில் பழமையானது பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த பான்வேலில் 1872-ல் ஆரம்பிக்கப் பட்டதாகும்.

சென்னை ராஜ்ய சுகாதார மந்திரி
கனம் M. A. மாணிக்கவேலு அவர்களிடம்
தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்
ஸமர்ப்பித்த மஹஜர்.

கனம் மந்திரி அவர்களே!

சென்ற 22—11—58-ல் திருச்சிராப்பள்ளியில் தங்களைப் பேட்டி கண்டு பேசி ஒரு மஹஜர் எங்களால் ஸமர்ப்பிக்கப்பட்டது. அதில் 19-11-58-ல் திருச்சியில் நடந்த தமிழ்நாடு ஆயுர் வேத மஹா மண்டலத்தின் விசேஷ மஹா நாட்டில் செய்யப் பட்ட தீர்மானங்களை யொட்டி, சென்னை அரசாங்கம் இந்திய வைத்திய விஷயமாக உடனே செய்ய வேண்டியவைகள் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. அந்த மஹஜரில் கேட்டுக் கொள்ளப் பட்ட காரியங் களைச் சீக்கிரமே நிறைவேற்றுமாறு கனம் மந்திரி அவர்களைத் திரும்பவும் கேட்டுக் கொள்ளவே இந்த மஹஜரை ஸமர்ப்பிக் கிறோம்.

இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்யங்களுக்குள் சென்னை அரசாங்கமே முதன்மையாக மிகுந்த முற்போக்குடனும் ஆர்வத் துடனும், நல்லெண்ணத்துடனும் இந்திய வைத்ய வளர்ச்சி விஷயத்தில் ஈடுபட்டது. ஆனால் நாளடைவில் இந்நிலை விபரீத மாக மாறி, இன்று இணைப்பு வைத்யக் கல்லூரி மூலம் இந்திய வைத்யத்தின் பெருமையை அடியோடு அழித்து, அரசாங்கத்தின் ஆரம்ப லக்ஷ்யத்திற்கு எதிராக இந்திய வைத்யத்திற்கே மிகுந்த இழிவை விளைவித்து விட்டது.

இந்திய வைத்யத்தின் நிலையை எல்லா ராஜ்யங்களிலும் சென்று ஆராய்ந்தறிய மத்திய அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட உடுப்பா குழுவினர் இணைப்பு வைத்யக் கல்லூரியைப் பார்த்து

விட்டு இக் கல்லூரியில் பெயரளவிற்கும் சொல்லும் படியாகக் கூட இந்திய வைத்யத்தில் ஒன்றுமே கற்பிக்கப் பட வில்லை என்று தமது கருத்தை ஸ்பஷ்டமாக வெளியிட்டுள்ளனர். இக் கல்லூரியில் கொடுக்கப் படும் அலோபதிக் கல்வியும் எம். பி. பி. எஸ்ஸுக்குச் சமமாகக் கருத முடியாதென அலோபதி நிபுணர்களும் ஸ்பஷ்டமாகச் சொல்கிறார்கள். இதை உணராமலோ, உணர விரும்பாமலோ இணைப்பு வைத்யக் கல்லூரி மாணவர்கள் இந்திய வைத்யத்தில் தங்களுக்குத் தான் உயர்ந்த தகுதி என்றும், அலோபதியிலும் எம். பி. பி. எஸ்ஸுக்குச் சமமானவர்கள் என்றும் பதவிக்குச் சண்டையிடுகின்றனர். ஸமீபத்தில் அவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்ததற்கு அவர்கள் கூறும் முக்கிய காரணம் அலோபதிகர்கட்கு நிகரான அந்தஸ்தும் வஸதிகளும் தமக்கு அளிக்கப் படாதது தான். இதற்கெல்லாம் மூல காரணம் வைத்ய சாஸ்த்ரங்களில் இணைப்பு என்ற மோசமான, நடைமுறைக்கொவ்வாததான கல்வித் திட்டமும் பாடமுறையும் தான்.

இந்த சூழ்நிலையில் இந்திய வைத்ய முறைகளில் பயிற்சியற்றவர்களும் வெறுப்புள்ளவர்களுமான டீன் (Dean) •முதலிய அதிகாரிகளின் பூர்ண ஒத்துழைப்பு காரணமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இந்திய வைத்யப் பாட நேரம் கிரமமாகக் குறைக்கப் பட்டு, உடுப்பா கமிட்டியினர் கூறும் வகையில் இந்திய வைத்யத்தில் பெயரளவிற்குக்கூட ஓரம்சமும் போதிக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது.

இதைக் கருதியே இந்திய வைத்யத் துறையில் தேர்ந்த ஒருவரையே இந்திய வைத்ய இலாகாவின் தலைவராக நியமிப்பது அரசாங்கம் இந்திய வைத்யத்திடம் கொண்டுள்ள நல்லெண்ணத்தைச் செயலாற்றுவதற்கு மிகவும் அவசியமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். இதற்கு மாறாக, இந்திய வைத்ய இலாகாவின் தலைவராக இந்திய வைத்யத்தில் பற்றுமற்று வெறுப்புமுள்ள அதன் வளர்ச்சியில் நம்பிக்கை யற்ற ஒரு அலோபத்கரை நியமிப்பது பிரஸித்தரான நாஸ்திகரை தேவாலய நிர்வாஹத்தில் நியமிப்பது போலாகின்றது. பொருளாதாரத் துறையிலோ, உத்தியோக நியமனத் துறையிலோ மாத்திரம் இவரது அதிகாரமிருந்தால் அதனால் கேடு அதிகம் விளையாது. ஆனால் இந்திய வைத்ய முறைகளின் வளர்ச்சி விஷயமாக நல்லெண்ணத்துடன் ஈடுபடும் அரசாங்கத்தின் கொள்கைகளை வகுப்பதிலும், அவைகளைச் செய

லாற்றுவதிலும் பொறுப்பேற்க விருக்கும் ஓரதிகாரி இந்திய வைத்யத்திலேயே வெறுப்பையும், நம்பிக்கை யில்லாமையையும் வெளிக்காட்டுபவராக அமையும் போது தவறான எதிர்பாராத விளைவிற்கே அவரது நியமனம் வழி கோலுகிறது.

இதற்கு ஒரு சான்று காட்டுவோமாக :

குரு பரம்பரையாகப் பயின்று, தொழில் செய்து கொண்டிருக்கும் வைத்யர்களின் நன்மைக்காக அவர்களைப் பதிவு செய்யும் எண்ணத்துடன் நமது அரசாங்கம் 7-8-58 அன்று ஒரு உத்தரவு வெளியிட்டது. (M. S. No. 2447 Health) ஆனால் அதற்குரிய சட்ட திட்டங்களை வகுத்து செயலாற்றும் பொறுப்பை அலோபதி அதிகாரிகளிடம் அரசாங்கம் ஒப்படைத்தது. அதன் விளைவு என்ன? வைத்தியர்கள் நிலைமையை முற்றிலும் அறியாத அந்த அதிகாரி சில தனிப் பட்ட சுயநலக் காரர்களின் ஆலோசனையின் பேரில் பரம்பரை வைத்யன் ஒருவன் கூட நேரான வழியில் பதிவு பெற முடியாத படி சட்ட திட்டங்களை வகுத்துள்ளார். ஏ வகுப்பிலோ, ஸ்தாபனங்களில் பயிற்சி பெற்று பி-1 வகுப்பிலோ பதிவு பெற்ற ஒரு வைத்யரிடம் 4 ஆண்டுகள் பயிற்சி பெற்று 10 ஆண்டுகள் தொழில் முறையில் பழகியவரே இந்தப் பதிவுக்குத் தகுதி பெறுவார். இங்கு கவனிக்க வேண்டியவை : குரு பரம்பரையில் தொழில் பயிற்சி பெற்றவர் இந்தச் சட்டம் வருமென எதிர்பார்த்து இன்று பதிவு பெறுவதற்காக 10 ஆண்டுகளுக்கு முன்பே ஏ அல்லது பி-1 வகுப்பு பதிவு பெற்றவரிடம் எவ்விதம் பயிற்சி பெற்றிருக்க முடியும்? தம்மை விட குறைந்த அளவில் இந்திய வைத்ய ஞானம் பெற்ற ஏ வகுப்பினரிடம் சீடனாக இருந்து பயிற்சி பெற யார் விரும்பி யிருக்க முடியும்? தனித்த சித்த வைத்ய முறையில் 10 ஆண்டுகளுக்கு முன்பு கல்வி வஸதி யளிக்கும் ஸ்தாபனங்கள் இல்லாததால் பி-1 வகுப்பில் பதிவு பெற்ற வைத்யர்களிடம் இன்று பெரும்பாலாக இருக்கும் சித்த வைத்யர்கள் எவ்விதம் பயிற்சி பெற்றிருக்க முடியும்? ஆக நேரான வழியில் இன்று வைத்யத் துறையில் இருக்கும் பரம்பரை வைத்யர்கள் அவர்களுக்காகவே அமுலாக விருக்கும் பதிவுச் சட்டத்தின் படி பதிவு எங்ஙனம் பெற முடியும்? ஒழுங்கற்ற முறையில் அத்தாட்சிப் பத்திரம் வாங்குவதையும் கொடுப்பதையும் நிர்ப்பந்திக்கும் நிலைமையை இந்தப் பதிவுச் சட்டம் உண்டாக்கினால் அதில் ஆச்சரியமேது? ஆகவே, அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைச் செயலளவில் பயனற்றதாகச் செய்வதற்காகவே இந்தப் பதிவு சட்டம் இக் கல்லூரியின் அலோபதிக் அதிகாரியினால் வகுக்கப் பட்டுள்ளது என்று

தேறுகிறது. ஆதலால் அரசாங்கத்தின் கொள்கைகளை அவைகளின் முழு உருவில் செயலாற்றத் தக்க இந்திய வைத்ய நிபுணரிடம் இவ்வதிகாரம் உடனடியாக ஒப்படைக்கப் பட்டு, பதிவுமுறை பாடத் திட்டம் முதலியவை திருத்தி யமைக்கப் பட வேண்டும்.

முடிவில் இந்திய வைத்ய சாஸ்த்ரங்கள் நமது நாட்டுக்கு உகந்தவை, மலிவு, எளிது, ஏழைகளாலும் அடையக் கூடியது, இன்னமும் இந்தியாவில் முக்கால் பங்குக்கு மேல் மக்களுக்கு வைத்ய உதவி கொடுக்கின்றன என்பது முதலிய இந்த பல குணங்கள் வாய்ந்தவைகள் என்ற காரணத்திற்காக மட்டும் இந்திய வைத்தியங்களை நமது ஜன நாயக அரசாங்கம் வளர்க்கக் கடமைப் பட்டுள்ளது என்று நாங்கள் சொல்லவில்லை. மேற் கூறிய குணங்களுடன் பிணிகளைப் போக்குவதிலும் தடுப்பதிலும் விக்ஞான ஸித்தாந்தங்களிலும் இந்திய வைத்ய சாஸ்த்ரங்கள் வெளி நாட்டு வைத்ய சாஸ்த்ரங்களைப் பார்க்கிலும் பன் மடங்கு மேலானவை. அப்பேர்ப்பட்டவைகளை ஜனங்கள் பெற்று வருபவைகளைத் தொடர்ந்து அவர்கள் அடைய வழியில்லாமல் செய்வது நாட்டிற்குப் பெருத்த நஷ்டமாகும். ஆதலால் ஆயுர்வேத சித்த வைத்யங்களைச் சரியான வழியில் வளர்க்க வேண்டியது அரசாங்கத்தின் முதற் கடமையும் பொறுப்புமாகும்.

இப்போது செய்ய வேண்டியவையாவன :

1. இந்திய வைத்ய முறை நிர்வாஹத்தை அம்முறை நிபுணர்களிடம் ஒப்படைக்க வேண்டும். முக்கியமாக இவ் விஷயத்தில் கவனிக்க வேண்டியவை : ஆயுர்வேதம், சித்தம் என்ற இரு முறைகள் தனித்து பழக்கத்திலுள்ளன. அவைகளைத் தனித்தே வளர்ப்பது தான் உசிதம். அவைகளின் தனித்த வளர்ச்சிக்குக் குந்தகம் விளையாதிருக்க அந்தந்த நிபுணரின் மேற்பார்வையில் ஆயுர்வேதத்திற்கும், சித்தத்திற்கும் (1) கல்லூரி, (2) இலாகா, (3) இவைகளுக்கு ஆலோசனை கூறி உதவும் நிபுணர் குழு இவை தனித்து அமைக்கப் பட வேண்டும்.

2. இந்திய வைத்ய முறைகளின் வளர்ச்சிக்குக் குந்தகமாக விருக்கும் ஜி. ஸி. ஐ. எம். பாடத் திட்டத்தை உடன் நிறுத்த வேண்டும். தற்போது ஜி. ஸி. ஐ. எம். கல்வி பயிற்சி பெறும் மாணவர்கட்கு அவர்களது தகுதி பரீக்ஷை முடியும் வரை வேறு ஏற்பாடுகள் வேறிடத்தில் செய்து கொடுக்கப் பட வேண்டும்.

3. சென்னை ஸர்வகலாசாலை அங்கீகரித்துள்ள பி. ஐ. எம். கல்வித் திட்டத்திற்கேற்ப பாட முறைகள் வகுத்து கல்வி போதிக்கப் பட வேண்டும். தேவையாயின், நிபுணர்களின் யோசனையின் பேரில் பி. ஐ. எம். பாட முறையிலும் போதிய அபிவிருத்திகள் செய்து கொள்ளலாம்.

4. தற்போதுள்ள இணைப்பு வைத்யக் கல்லூரி என்ற பெயரை உடன் அகற்றவேண்டும். ஆயுர்வேதக்கல்லூரி, சித்தக் கல்லூரி என்று ஸ்பஷ்டமாய் பெயரிட வேண்டும். அதன் லக்ஷ்யத்தையும் அமைப்பையும் எப்போதும் மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும், பொதுமக்களுக்கும், அரசினருக்கும் ஞாபகப் படுத்தவும், லக்ஷ்யத்திற்கு விரோதமான கிளர்ச்சிகளுக்கு அங்கு இடமளிக்காமலிருக்கவும் இது பெரிதும் உதவும்.

5. இணைப்பு முறைக் கல்லூரியின் அதீனத்தில் தற்போதுள்ள கட்டடம், நிதி முதலிய எல்லா வஸதிகளும் அதற்குரிமை பெற்ற இவ்விரு கல்லூரிகளிடமும் ஒப்படைக்க வேண்டும். இந்திய வைத்ய முறைகளின் வளர்ச்சிக்கெனவே அரசாங்கத்தால் ஒதுக்கப் பட்டதும் மற்ற பொது ஸ்தாபனங்களால் அளிக்கப் பட்டதுமான மான்யத் தொகைகளைக் கொண்டே தற்போது கல்லூரி வளர்ந்திருப்பதால் இந்தக் கல்லூரியும் அதன் சூழ் நிலையும் இந்திய வைத்ய முறைகளின் வளர்ச்சிக்காகவே பயன்படுமாறு இவ்விரு கல்லூரிகளிடம் ஒப்படைப்பது அரசாங்கத்தின் நேர்மையான கடமையாகும்.

இந்தப் புனிதமான பணியில் அரசாங்கம் உடனே நடவடிக்கைகளை எடுக்க தாங்கள் பெரிதும் ஈடுபடக் கோருகிறோம். நாங்கள் இது விஷயமாக அரசாங்கத்துடன் பூரணமாக ஒத்துழைக்க வாக்குறுதி அளிக்கிறோம். இந்திய வைத்ய அபிவிருத்தித் துறையில் உள்ள சிரத்தை மேம்பாட்டால் எங்களுக்கு பேட்டியளித்து கோரிக்கைகளுக்குச் செவி மடுத்ததற்காகவும், கோரிக்கைகளை செயலாற்ற விருப்பதற்காகவும், எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல
அங்கத்தினர்கள்.

காரியாலயம் :—
தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
27, சின்னக்கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி—2.

வைத்யர்களின் புள்ளி விவரம்.

மக்களில் 2500 பேர்களுக்கு ஒரு மருத்துவர் வீதமும், 5000 பேர்களுக்கு ஒரு டாக்டர் வீதமும் இருக்கின்றனர்.

மாகாண வாரியாக— பஞ்சாப் மாகாணத்தில் தான் உயர்ந்த பக்ஷமாக பதிவு செய்யப்பட்ட வைத்யர்களுளர். அங்கு மக்களில் 654 பேருக்கு ஒரு வைத்யர் வீதம் இருக்கின்றனர். அடுத்தபடியாகக் கேரளத்தில் 1334 பேருக்கு ஒரு வைத்யர் வீதமிருக்கின்றனர். அஸாமில் குறைந்த பக்ஷமாக வைத்யர்களுள்ளனர். அங்கு 10911 பேருக்கு ஒரு வைத்யர் வீதமிருக்கின்றனர்.

14 மாகாணங்கள், 4 மத்ய நிர்வாஹ ப்ரதேசங்கள்— ஆகியவற்றில் 10 மாகாணங்களிலும், ஒன்று மத்திய நிர்வாஹ ப்ரதேசத்திலும் நாட்டு வைத்ய முறைத் தொழில் நடைமுறைக் கட்டுப்பாட்டுக்கான இந்திய மருத்துவ முறை போர்டுகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

ஸ்ரீரங்கம் லக்ஷ்மீ ப்ரஸந்ந ஸ்ரீ வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

ஆகஸ்ட் மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

ஆண்கள்	693	
பெண்கள்	661	1702
சிறுவர்	348	

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் எஸ்டேட்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம், குங்குமப்பூ முதலியவைகளுக்கு நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS.

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs Merchants

LUDHIANA. PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.

நெ.		ஸம்ஸ்க்ருதப் பெயர்	தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
355	जलवाहिन्यः सिराः	ஜலவாஹினீ ஸிரைகள்	கண்ணீர் கோளங்களிலிருந்து வரும் குழாய்கள்,	Lacrimal Duckts.
356	जाठराग्निः	ஜாடராக்னி	பாசகாக்னி,	Internal fire.
357	जानु	ஜானு	முழங்கால்	Knee
358	जानुकपालिका	ஜானு கபாலிகா	முழங்கால் சில்லு	Patella. Knee cap
359	जानुमण्डलं	ஜானு மண்டலம்	முழங்கால்	Knee
360	जानुसन्धिः	ஜானுஸந்தி	முழங்கால் பூட்டு	Knee joint
361	जान्वधःसन्धिः	ஜான்வதஸ்ஸந்தி	முழங்காலின் கீழ் காலின் உள் வெளி எலும்புகளின் பூட்டு	Proximal Tibio-fibular joint.
362	जान्वस्थिः	ஜாங்வஸ்தி	உட்கால் எலும்பின் முண்டு	Tibial Tuberosity
363	जालधरा सिरा जालन्धरा सिरा	ஜாலதராஸிரா ஜாலந்தரா ஸிரா	கையின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் ஹிருதயத்தை நோக்கிச்செல்லும் ரத்தக் குழாய்கள்.	Great Suphenous, cephalic or Basalic vein.
364	जालानि	ஜாலானி	ஸிரை முதலியவைகள் வலை போன்று பின்னியிருக்குமிடம்	Refe. Plexus, net-work, Interlacing, or Decussation.

தெ.	ஸம்ஸ்க்ருதப் பெயர்		தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
365	जिह्वा	ஜிஹ்வா	நாக்கு, சுவை அறியும் இந்திரியம்	Tongue, organ of taste.
366	जिह्वाग्रं	ஜிஹ்வாக்ரம்	நாக்கின் நுனி	Tip of the Tongue.
367	जिह्वातलं	ஜிஹ்வாதலம்	நாக்கின் கீழ் பாகம்	Under surface or under the Tongue.
368	जिह्वाप्रबन्धः	ஜிஹ்வா பிரபந்தம்	நாக்கின் மூலபாகம்,	Root of the Tongue,
369	जिह्वाबन्धनं	ஜிஹ்வா பந்தனம்	நாக்கின் மூலபாகம், மர்ம ஸ்தலம்	Root of the Tongue, Pharyngeal part of the dorsum of the tongue, Base of the tongue.
370	जिह्वासेवनी	ஜிஹ்வா ஸேவனீ	நாக்கின் அடியிலும் நடுவிலும் ஜவ்வுகள் சேர்த்துத் தைத்துள்ளது போன்ற இடங்கள்	Raphe of the Tongue. Frenulum Linguae,

ெந.	ஸம்ஸ்க்ருதப்பெயர்		தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
371	जीवरक्तं	ஜீவரக்தம்	சுத்தரத்தம்	Normal blood, most essential to life.
372	जीवरक्ताशय:	ஜீவரக்தாசயம்	மார்பகம்	Thorax, heart & lungs.
373	जीवस्थानं जीवितधाम जीवितायतनं	ஜீவஸ்தானம் ஜீவிததாம ஜீவிதாயதனம்	மர்மஸ்தானம்	Vital organs.
379	ज्योतिःस्थानं	ஜ்யோதிஸ்ஸ்தானம்	கர்பத்திலுள்ள சிசுவின் கல்லீரல்	Liver of the foetus.
380	डिंब:	டிம்பம்	பெருங்குடலின் கடைசி வளைவு	Sigmoid colon.
381	तनूसहा:	தனூஸஹம்	உடலின் மேலுள்ள மயிர்கள்	Hairs (especially on the body.)
382	तन्त्र	தந்திரம்	(1) சரீரம் (2) அதன் பல்வேறு அமைப்புகள்	Body as a whole. Defferent sys, tems of the body,
383	तरुणास्थि	தருணாஸ்தி	குறுத்தெலும்புகள்	Cartilage.

நெ.	ஸம்ஸ்க்ருதப் பெயர்		தமிழ் விவரணம்	ஆங்கிலப் பெயர்
384	तरुणास्थिमर्म	தருணாஸ்தி மர்மம்	மூக்கின் குறுத்தெலும்பு பாகம்	Common sensory area of the nasal cavity.
385	तर्जनी	தர்ஜநீ	ஆள்காட்டி விரல்	Index finger.
386	तलं	தலம்	உள்ளங்கால், உள்ளங்கை புறம்	Palm or Sole, Surface.
387	तालु	தாலு	அண்ணம்	Hard Palate, Anterior Fontanelle.
388	तालुके तालुष्के	தாலுகம், தாலுஷகம்	அண்ணத்தின் இடது வலது பாகங்கள்	Two halves of the hard palate.
389	तालुदेशः	தாலுதேசம்	அண்ணம்	Palate
390	तालुप्रदेशः (मूर्धगः)	தாலுப்ரதேசம் தலையிலுள்ளது	சிசுவின் தலையின் நடுவில் புலப்படும் மெல்லிய தகட்டெலும்பு.	Anterior Fontanel.
391	तालुमांसं	தாலு மாம்ஸம்	தசைகளாலான உள்ளண்ணம்	Soft Palate.
392	तालुमूलं	தாலு மூலம்	உள் நாக்குள்ள இடம்	Uvular region of the Palate.

வாரியர்

க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனு பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

(1936-ல் நிறுவப்பட்டது.)

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS,

MUSK MERCHANTS.

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால் இனாமாக அனுப்பப் பெறும்.

‘மார்த்தண்ட’வின் ஆயுர்வேத இஞ்சக்ஷன்கள்.

சீக்ரத்தில் குணமளிக்கும்

இந்த எட்டு வித இஞ்சக்ஷனைக் கவனியுங்கள்!

நவீன ஸம சீதோஷ்ண வசதியும் புதிய இயந்திரங்களும் அமைந்த ‘மார்த்தண்ட’ மருந்து தயாரிப்பு சாலையில் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்று தகுதி வாய்ந்த ரஸாயனிகளால் தயாரிக்கப் பெற்ற எட்டு வகை இஞ்சக்ஷன்களான **ஸோமா** ச்வாஸகாஸங்களிலும், **சூலாந்தக** எல்லா வாயு வலிகளிலும், **ஸ்ம்ருதிதா** உன்மாத மூர்ச்சைகளிலும், **ஹ்ருதயாம்ருத** ஹ்ருதய பலஹீனத்திலும், **தாபீகர** ஜன்னி ஜல தோஷங்களிலும், **மருதாசீ** வ்ாதரோகங்களிலும், **ப்ரதராரி** பெரும்பாட்டிலும், **க்லீபாந்தக** நபும்ஸகத்திலும் உடனே ஆச்சர்யமாய் குணமளிக்கின்றன, இவைகளை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள், ஆராய்ச்சிக்காகப் பயன்படும் படங்களடங்கிய **மார்த்தண்ட** மாதப் பத்ரிகையை இலவசமாகப் பெறுங்கள். இவை தவிர ஆஸவம் அரிஷ்டம் பஸ்மம் சூர்ணம் முதலியவைகளும் சாஸ்த்ரீய முறை தவறாது தயாராகின்றன, கடிதங்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதுங்கள்.

MARTAND PHARMACEUTICALS,

(Research Institute of Indian Medicines)

BARAUT S. S Rly, (U. P.)

தி இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185

லேட்டிஸ் பிரிட்ஜ்ரோட், அடையாறு, மதராஸ் 20.

தபால் பெட்டி நெ. 907. போன் நெ. 71628.

ப்ரஸிடெண்ட் :— வைத்யரத்ன, கேப்டன்
G. ஸ்ரீனிவாஸமூர்த்தி, பி. ஏ., பி. எல்., எம். பி. ஸி. எம்.

வைஸ்ப்ரஸிடெண்ட் :—
டாக்டர் Y. சூர்யநாராயண ராவ், எல். ஐ. எம்.

அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை :—	ரூ.	100,000
(பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 20,000 பங்குகள் கொண்டது)		
வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை ...	ரூ.	84,735
சங்கத்தின் க்ஷேம நிதி ...	ரூ.	2,46,709
கட்டட நிதி ...	ரூ.	1,55,402
மற்ற நிதிகள் ...	ரூ.	2,75,016

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள தேசீய இந்திய வைத்தியர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களும் இந்த சங்கத்தில் மெம்பராகச் சேரலாம்.

பங்கு ஒன்றுக்கு ரூ. 5–00. பிரவேச கட்டணம் 25 நயாபைசாக்கள்)

2. ஆயுர்வேத, சித்த, யூனானி தேசீய மருந்துகள், சாஸ்த்ரீய முறைப்படியும், தக்கமேற்பார்வையுடனும் தயார்செய்து, தேசீய மருந்துகளைக் கையாளும் வைத்தியர்களுக்கு சப்ளை செய்யும் சிறந்த கூட்டுறவு சங்கம்,

— எமது வெளியீடுகள். —

1. **வைத்ய யோகரத்னவளி** ஆங்கில பிரதி ரூ. 6—00
   ,, தெலுங்கு பிரதி ரூ. 6—50
2. **சித்தபார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00
3. **யூனானி பார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00

(தபால் கட்டணம், விற்பனை வரி பிரத்தியேகம்.)

கிளை அலுவலகங்கள் :—

(1) 20/320, பெட்டி பொட்டலவாரி தெரு, கவர்னர் பேட்டை, விஜயவாடா–2. (ஆந்திர ராஜ்யம்.)

(2) 88, ஆற்காடு சீனிவாச ஆச்சாரி தெரு, பெங்களூர்–2. (மைசூர் ராஜ்யம்.)

(3) கோவாபரேடிவ் அர்பன் பாங்கு கட்டிடம், கல்லை ரோடு, கோழிக்கோடு–2. (கேரள ராஜ்யம்.)

(4) நகர விற்பனை டிப்போ, 4/186, மவுண்ட் ரோடு, மதராஸ்–2 டெலிபோன் நெ, 86520.

VAIDYACHANDRIKA SEPTEMBER —1959 Regd. No. M. 4018.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

"சக்தி ஸஞ்ஜீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம் எங்கும் கிடைக்கும்.

❋

தயாரிப்பவர் :—

சக்தி விலாஸ வைத்தியசாலை

கரூர். (S. Ry.)

Printed at the Srivilasam Press, Srirangam and Published by S. V. Radhakrishna Sastri for Tamilnad Ayurveda Maha Mandalam, Bharat Ayurveda Sala, 27, Chinnakadai Street, Teppakulam, Tiruchy
Editor: S. M. Sundararajacharya, Srirangam.